ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் பாஜக செய்தித் தொடர்பாளரா?

சென்னை, டிச. 25: தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் பாஜக செய்தி தொடர்பாளராக செயல்படாமல் அவரது ஆளுநர் பொறுப்புக்கான பணியை மட்டும் மேற்கொள்ள வேண்டும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெள்ள பாதிப்புகளை திமுக அரசு முறையாகக் கையாளவில்லை எனஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக அமைச்சர் பி.கே.சேகர் பாபு சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியது: பாரதியஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளராக செயல்படாமல் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பணியை தமிழிசை செளந்தரராஜன் கவனிக்க வேண்டும் என்றார் அவர்.

ஒடிஸா முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரனுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி

சென்னை, டிச. 25: ஒடிஸா முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரனுக்கு, காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அவரது உடல் இன்று நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இது குறித்து, திங்கள்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஒடிஸா மாநிலத்தின் முன்னாள் ஆளுநரும், முன்னாள் முதல்வர் காமராஜர், கருணாநிதி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவருமான எம்.எம்.ராஜேந்திரன் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். தமிழக அரசின் தலைமைச் செயலராக இருந்து அரசுத் துறைகளில் மிகுந்த அனுபவம் பெற்ற ராஜேந்திரன், 1957-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் தனது பணியைத் தொடங்கினார்.

ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் ஆட்சியராகவும், மத்திய அரசுத் துறையின் செயலராகவும் பொறுப்புகளை வகித்தவர். ஆட்சிப் பணி ஓய்வுக்குப் பிறகு, ஒடிஸா மாநில ஆளுநராக பணியாற்றினார்.

காவல் துறை மரியாதை: மறைந்த எம்.எம்.ராஜேந்திரன், உடலுக்கு அரசின் சார்பில் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும், அவரது சேவையைப் போற்றும் வகையில், காவல் துறை மரியாதையுடன் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

மறைந்த ராஜேந்திரன், கடந்த 1999-ஆம் ஆண்டு ஒடிஸா மாநில ஆளுநராகப் பொறுப்பேற்றார். 2004-ஆம் ஆண்டு நவம்பர் 17 வரை அந்தப் பதவியில் இருந்தார்.

இன்று நல்லடக்கம்: மறைந்த எம்.எம்.ராஜேந்திரனின் உடல் கீழ்ப்பாக்கத்தில் உள்ள கல்லறையில் செவ்வாய்க்கிழமை நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. அப்போது, காவல் துறையினரின் துப்பாக்கி குண்டுகள் முழங்க இறுதி நிகழ்வு நடைபெறும். மறைந்த எம்.எம். ராஜேந்திரனுக்கு மனைவி சுசிலா, இரண்டு மகன்கள், ஒரு மகள் உள்ளனர்.

மேட்டூர் அணை நிலவரம்

மேட்டூர், டிச. 25: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை காலை 1,399 கனஅடியாக இருந்தது.

அணையின் நீர்மட்டம் 70.93 அடியாக உயர்ந்துள்ளது.

அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1,387 கன அடியிலிருந்து 1,399 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 250 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 33.50 டி.எம்.சி.யாக உள்ளது.

காலமானார்

பாரதிதாசனின் பேரன் கோ.செல்வம் (65)



புதுச்சேரி, டிச.25: பாவேந்தர் பாரதிதாசனின் பேரனும், புதுச்சேரி சிந்தனையாளர்கள் பேரவைத் தலைவருமான கோ. செல்வம் (65) திங்கள்கிழமை காலை காலமானார்.

பாவேந்தர் பாரதிதாசனின் மகன் மன்னர்மன்னன், சாவித்திரி தம்பதியின் மூத்த மகனான கோ. செல்வம் அகில இந்திய வானொலியில் புதுச்சேரி நிலைய உதவி இயக்குநராக இருந்துள்ளார். புதுச்சேரி சிந்தனையாளர்கள் பேரவைத் தலைவராக இருந்து கட்டுரைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார்.

மறைந்த கோ.செல்வத்துக்கு மனைவி மணிமேகலை செல்வம், மகன் பாவேந்தன், மகள் இசையரசி ஆகியோர் உள்ளனர்.

அவரது இறுதிச்சடங்கு செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புதுச்சேரி எல்லைப்பிள்ளைச்சாவடி சுப்பையா வீதி, பொன்னி அடுக்கக வளாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகிறது. தொடர்புக்கு: 94867 48522.

இரங்கல்: அவரது மறைவுக்கு புதுச்சேரி சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சிவா மற்றும் சமூக செயற்பாட்டாளர் சுகுமாறன் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பேரிடரை தமிழக அரசு சரியாக கையாளவில்லை

தமிழிசை குற்றச்சாட்டு

திருநெல்வேலி சந்திப்பு சிந்துபூந்துறை பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய தெலங்கானா ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன்.

திருநெல்வேலி, டிச. 25: தென் மாவட்டங்களில் ஏற்பட்ட பேரிடரை தமிழக அரசு சரியாக கையாளவில்லை என்றார் தெலங்கானா ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன்.

திருநெல்வேலி சந்திப்பு சிந்துபூந்துறை பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழிசை செளந்தரராஜன் நிவாரண உதவிகளை வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தேன். பொதுமக்கள் குடிநீர், உணவு, உடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

கால்வாய்கள், குளங்கள், கண்மாய்களில் தண்ணீர் செல்ல தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வெள்ளம் தொடர்பாக தமிழக அரசு அதிக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். நான் தேர்தலில் போட்டியிடுவதற்காகத்தான் இங்கு வருவதாக அமைச்சர்கள் கூறி வருகின்றனர். நான் மக்களை பற்றி சிந்திப்பதால்தான் இங்கு வந்துள்ளேன். நான் பாஜகவின் செய்தித் தொடர்பாளர் அல்ல. ஆனால் திமுகவுக்கு தேர்தல், வாக்கு மட்டும்தான் குறிக்கோள். மக்களை பற்றி கவலைப்படுவதால்தான் இவ்வாறு பேசுகிறேன்.

மத்திய அரசு நிதி அளித்த பிறகும், அதிக நிதி ஒதுக்க வேண்டும், தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்றால் மாநில அரசு எதற்கு? தேசிய பேரிடராக அறிவிக்க பல்வேறு விதிமுறைகள் உள்ளன. ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்தில் தவித்த ரயில் பயணிகளுக்கு மத்திய அரசு மூலம் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டன.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் தொடர்பாக பிரதமர் மற்றும் நிதி அமைச்சருக்கு கடிதம் எழுதவிருக்கிறேன். பேரிடரை கவனமாகவும், சரியாகவும் தமிழக அரசு கையாளவில்லை என்றார்.

திருநெல்வேலி சட்டப்பேரவை உறுப்பினர் நயினார் நாகேந்திரன், பாஜக மாவட்டத் தலைவர் தயாசங்கர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

முட்டை விலை ரூ. 5.80 காசுகளாக உயர்வு

நாமக்கல், டிச. 25: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை ரூ. 5.80 காசுகளாக உயர்ந்துள்ளது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், பண்ணையாளர்களிடம் முட்டை விலை மாற்றம் குறித்து கருத்துகள் கேட்கப்பட்டன. பிற மண்டலங்களில் விலை உயர்வு மாற்றம் செய்யப்படுவதால், இங்கும் மாறுதல் செய்ய வேண்டும் என அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை 5 காசுகள் உயர்வுடன் ரூ. 5.80-ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

பல்லடத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கறிக்கோழி கிலோ ரூ. 101-ஆகவும், முட்டைக் கோழி கிலோ ரூ. 80 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

நிவாரண நிதி: டிச.29-இல் தமிழகம் முழுவதும் விசிக போராட்டம்

சென்னை, டிச. 25: மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு மத்திய அரசு உடனடியாக நிவாரண நிதி வழங்க வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் டிசம்பர் 29-இல் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அக் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மிக்ஜம் புயல் மற்றும் கனமழையால் டிசம்பர் 4-இல் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அதைப்போல டிசம்பர் 16, 17-இல் பெய்த வரலாறு காணாத மழையால் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்த இயற்கைப் பேரிடரை தமிழக அரசு தனியாக எதிர்கொள்வது இயலாத காரியம். அதனால், இயற்கை பேரிடராக அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இடைக்கால நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்த கோரிக்கை மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

எப்படி வரிப் பகிர்வில் தமிழகத்துக்கு மத்திய அரசால் அநீதி இழைக்கப்படுகிறதோ, அது போலவே பேரிடர் நிவாரண நிதியை ஒதுக்குவதிலும் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது. இதைக் கண்டித்தும், தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழகத்துக்கான நிவாரணத் தொகையை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் டிசம்பர் 29-இல் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார்.

கீழவெண்மணி தியாகிகள் நினைவு தினம் அனுசரிப்பு

கீழவெண்மணி தியாகிகள் நினைவு ஸ்தூபியில் அஞ்சலி செலுத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மூத்த தலைவர் ஜி. ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

கீழ்வேளூர், டிச. 25: நாகை மாவட்டம், கீழ்வேளூர் அருகே கீழவெண்மணி கிராமத்தில் 55-ஆம் ஆண்டு வெண்மணி தியாகிகள் நினைவு தினம் திங்கள்கிழமை அனுசரிக்கப்பட்டது.

இக்கிராமத்தில் கடந்த 1968-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் தேதி கூலி உயர்வுக்காகப் போராடிய தொழிலாளர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் என 44 பேர், நிலச்சுவான்தாரர்களால் ஒரு குடிசையில் அடைக்கப்பட்டு, அந்த குடிசைக்கு தீ வைக்கப்பட்டது. இதில், 44 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர்.

இந்த கொடூர சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த படுகொலை சம்பவத்தில் பலியானவர்களுக்கு நினைவு ஸ்தூபி கட்டப்பட்டு, ஆண்டுதோறும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

அதன்படி, 55- ஆம் ஆண்டு நினைவு தினம் கீழ்வெண்மணி கிராமத்தில் உள்ள நினைவு ஸ்தூபியில் திங்கள்கிழமை அனுசரிக்கப்பட்டது. அரசியல் கட்சித் தலைவர்கள், பல்வேறு சமூக அமைப்பினர், கல்லூரி மாணவ- மாணவிகள் உள்பட ஏராளமானோர் பேரணியாக வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மூத்த தலைவர் ஜி. ராமகிருஷ்ணன், கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் சின்னதுரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஊழல் தடுப்பு போலீஸாரை பணி செய்ய விடாமல் தடுத்ததாக அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது வழக்கு

மதுரை, டிச. 25: மதுரையில் ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸாரை பணி செய்யவிடாமல் தடுத்ததாக, அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

மதுரையில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த அங்கித் திவாரி, திண்டுக்கல் அரசு மருத்துவரிடம் லஞ்சம் பெற்றபோது கடந்த ஒன்றாம் தேதி திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, மதுரையில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் சோதனையிடச் சென்றபோது, அங்கு அமலாக்கத் துறை உதவி இயக்குநர் தலைமையில் ஊழியர்கள் தடுத்தனர். இதனால், கூடுதல் போலீஸார் வரவழைக்கப்பட்டு, சோதனை நடத்தப்பட்டு, ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, அமலாக்கத் துறை அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்து, ஆவணங்களை எடுத்துச் சென்ற ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக காவல் துறை தலைமை இயக்குநருக்கு (டிஜிபி) அமலாக்கத் துறை சார்பில் புகார் அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அமலாக்கத் துறை அலுவலகத்தில் சோதனையிடச் சென்றபோது, அங்கிருந்த அதிகாரிகள், ஊழியர்கள் தங்களைத் தடுத்து நிறுத்தி பணியை செய்யவிடாமல் இடையூறு ஏற்படுத்தியதாக மதுரை ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் சார்பில் தல்லாகுளம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், மாநில ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் அமலாக்கத் துறை அலுவலகத்தில் சோதனையிடவிடாமல் தடுத்து, இடையூறு ஏற்படுத்தியதாக அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது தல்லாகுளம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின.

இதுதொடர்பாக மாநகரக் காவல் துறை உயர் அதிகாரிகள் கூறுகையில், ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் அளித்தப் புகாரின்பேரில், அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது, அரசு ஊழியர்களை பணி செய்ய விடாமல் தடுத்ததாக மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றனர்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு: பிரேமலதா வலியுறுத்தல்

சென்னை,டிச25: போக்குவரத்துத்தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் 1.20 லட்சம் தொழிலாளர்கள் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையில் பணிபுரிகின்றனர். இந்தத் தொழிலாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியம் உயர்த்தப்படும். திமுக அரசு வந்த பிறகு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை என மாற்றப்பட்டுவிட்டது. அதன்படி, 4 ஆண்டுகள் 2023 ஆகஸ்ட் 31-ஆம்தேதியுடன் நிறைவடைந்துவிட்டது. ஆனால்,இன்னும்பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை. இதனால், போக்குவரத்துத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மிகுந்த சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர். தமிழக அரசு உடனடியாக தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி, போக்குவரத்து தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண்: 5308/2023/அ2 நாள்: 21.12.2023

15-ஆவது மத்திய நிதிக்குழு மானியம் (பொது சுகாதாரம்) 2023-24, ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல் – 2023-24

1. தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி தென்னங்குடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் - 2023-24 திட்டத்தின் கீழ் வட்டார வளர்ச்சி அலுவலரால் (வ.ஊ) பணி மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறை முறையில்) **10.01.2024 மாலை 3.00 மணி** வரை வரவேற்கப்படுகின்றன.
2. முழுமையான விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதள முகவரியினை பார்வையிடவும்.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் **27.12.2023** முதல் **10.01.2024** வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்:

1	மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	10.01.2024 மாலை 3.00 மணி வரை
2	மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	10.01.2024 மாலை 4.00 மணி முதல்

செ.ம.தொ.இ/6786/ஒப்பந்தப்புள்ளி/2023

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம்

ICICI Home Finance

பெருநிறுவன அலுவலகம் : ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ICICI HFC டவர், அந்தேரி - குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா.

கிளை அலுவலகம்: அலகு 1, இடை மாடி, GKM ஆர்கேடு, 81, வார்டு - H, பிளாக் - 4, 100 அடிச் சாலை, இந்திரா காந்தி சதுக்கம் அருகில், புதுப்பாளையம் வருவாய் கிராமம், பாண்டிச்சேரி - 605005.

கிளை அலுவலகம்: 1ஆவது தளம், மனை எண் 8/3, முனிசிபல் காலனி சத்யா மேன்ஷன், கழிஞ்சூர் கிராமம், காங்கேயநல்லூர் சாலை, காந்திநகர் காட்பாடி, வேலூர்- 632006

[பார்க்க விதி 8(6)-இன் விதிமுறைகள்]

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் விதிமுறைகள் கீழான அசையாச் சொத்துக்களின் E-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிட்-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் சுருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் / கடன் கணக்கு எண்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் - தெரிந்த வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடன்	நிலுவைத் தொகை	குறைந்தபட்ச விலை	சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏல நாள் மற்றும் நேரம்
				டேவணித் தொகை (EMD)		
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	N மிஷ்ரிலால் (கடன்தாரர்), M சைமாதேவி (கூட்டுக் கடன்தாரர்) / கடன் கணக்கு எண் LHPDY00001458413 & LHPDY00001458414	மனை எண் 6 & 7 ஆகியவற்றில் உள்ள வீடு. சர்வே எண் 184/2B, பள்ளித் தெரு, தெள்ளாறு கிராம ஊராட்சி, ராமன் தெரு, Dkp மணி திருமண மண்டபம் எதிரில், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை, திருவண்ணாமலை, தமிழ்நாடு - 606601.	ரூ. 29,75,733/- 20.12.2023 நாள்படி	ரூ. 32,67,000/- ரூ. 3,26,700/-	15.01.2024 - முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	02.02.2024 - பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை
2.	A தியாகராஜன் (கடன்தாரர்), T ஈஸ்வரி (கூட்டுக் கடன்தாரர்), சுபாஷ் T (கூட்டுக் கடன்தாரர் 2) ஆறுமுகம் P (கூட்டுக் கடன்தாரர் 3) / கடன் கணக்கு எண் NHVLR00001278545 & NHVLR00001278543	மனை எண் 1-இல் உள்ள வீடு. அமைவிடம் - வார்டு E, பிளாக் 13, பழைய நகர சர்வே எண் 33/1, புதிய நகர சர்வே எண் 33/26, கதவு எண் 18E, கொசப்பாளையம் மருசூரன் தெரு, ஆரணி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம், வேலூர், தமிழ்நாடு - 631053	ரூ. 26,99,451/- 20.12.2023 நாள்படி	ரூ. 57,42,450/- ரூ. 5,74,250/-	15.01.2024 - முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	02.02.2024 - பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை

இணைய ஏலமானது எமது ஏல முகமையான குளோப்டெக் மூலம் இணையத்தளத்தில் (இணைய முகவரி: **https://BestAuctionDeal.com**) நடத்தப்படும். மொத்த நிலுவையையும் 01.02.2024 அன்று மாலை 05:00 மணிக்குள் வட்டியுடன் செலுத்தி விட அடமானதாரருக்கு / அறிவிப்புக்குரியவருக்கு இதன் மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தவறினால், இந்தக் கடனீட்டுச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும்.

விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித் தொகையை (EMD) RTGS / கேட்பு வரைவோலை (DD) வடிவில் (பார்க்க: பத்தி E) ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், அலகு 1, இடை மாடி, GKM ஆர்கேடு, 81, வார்டு - H, பிளாக் - 4, 100 அடிச் சாலை, இந்திரா காந்தி சதுக்கம் அருகில், புதுப்பாளையம் வருவாய் கிராமம், பாண்டிச்சேரி - 605005 எனும் முகவரிக்கு 01.02.2024 அன்று அல்லது அதற்கு முன் மாலை 04:00 மணிக்குள் அனுப்ப வேண்டும். பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர்கள் பதிவுப் படிவம் அத்துடன் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவம் ஆகியவற்றில் கையொப்பமிட்டு அவற்றையும் அலகு 1, இடை மாடி, GKM ஆர்கேடு, 81, வார்டு - H, பிளாக் - 4, 100 அடிச் சாலை, இந்திரா காந்தி சதுக்கம் அருகில், புதுப்பாளையம் வருவாய் கிராமம், பாண்டிச்சேரி - 605005 எனும் முகவரியில் உள்ள ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் அலுவலகத்தில் 01.02.2024 அன்று அல்லது அதற்கு முன் மாலை 05:00 மணிக்குள் தாக்கல் செய்ய வேண்டும். டேவணித் தொகைக்கான கேட்பு வரைவோலை (DD) "ICICI Home Finance Company Ltd. - Auction" எனும் பெயருக்குச் வேலூர், திருவண்ணாமலையில் மாற்றத்தக்கதாகவும் நாட்டுடைமையாக்கப்பட்ட / அட்டவணையிடப்பட்ட வங்கியைச் சார்ந்ததாகவும் இருக்க வேண்டும்.

சொத்துக்களைப் பார்வையிடுவது, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி தாக்கல் செய்வது குறித்த மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்க: ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் கைப்பேசி எண் - 9920807300 அல்லது எமது விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனம் NexXen Solutions Private Limited.

எந்தக் காரணமும் குறிப்பிடாமல் எந்த ஏலப்புள்ளியையும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் தள்ளுபடி செய்ய அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமையுண்டு.

விற்பனையின் விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகள் அறிய வருகை புரிய வேண்டிய இணையத்தளம்: **https://www.icicihfc.com/**

நாள்: 26.12.2023
இடம்: திருவண்ணாமலை, வேலூர்

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

HDFC BANK

ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்

கிளை : முதல் தளம் ஐ.டி.சி. சென்டர், 760, அண்ணா சாலை, சென்னை – 600 002. CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com.

கேட்புத் தொகை அறிவிப்பு

2002 ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (2) மற்றும் 2002 – ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3 (1) ன் கீழ் விடுக்கப்படுவது. மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி எண் 3-ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT- மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்.டி.எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப்பட்ட கீழே கையொப்பமிட்டுள்ளவர், தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) சட்டத்தின் பிரிவு 13 (2) ன் கீழ் கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் அவரவர் அறிவிப்பில் கண்ட தொகையினை அதன் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார். கீழே கையொப்பமிட்டுள்ளவர் தமக்கு இறுதியாக தெரிந்த கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) -ன் வீட்டு முகவரியில் மேற்கூறிய அறிவிப்புகளின் நகல்களை ஒட்ட வகைசெய்துள்ளார். மேற்கூரிய அறிவிப்புகளின் உண்மை நகல்கள் அவ்வதிகாரியினிடம் உள்ளதால் மேற்சொன்ன கடனாளர்கள் / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) -க்கு அவை தேவை இருப்பின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அன்னாரை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறிய நிலையில் இந்த கேட்புத்தொகை அறிவிப்பின் மூலம் மேற்படி கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) தாங்கள் எங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள் மேலும் குறிப்பிட்டுள்ள கடனாளரால் எழுத்து பூர்வமாக உள்ள ஆவணத்தின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதி வரையிலான தொகை மற்றும் ஆண்டொன்றிக்கு 18% வட்டியுடனும் இந்த அறிவிக்கை வெளியிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், ஹெச் டி எஃப் சி-க்கு செலுத்த வேண்டுமாறு மீண்டும் ஒரு முறை கோரப்படுகிறார். மேலும், கடனை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக, கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) அவரவர்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களை கடன் பாதுகாப்பிற்காக **ஹெச் டி எஃப் சி**-க்கு அடமானம் செய்துள்ளனர். சட்டத்தின் பிரிவு 13-ன் உட்பிரிவு (8) -ன் படி அடமானம் பெற்ற சொத்தினை கடனாளர்(கள்) மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	கடனாளர் பெயர் (கள்)/ சட்டப்படியான வாரிசு (கள்) சட்டப்படியான பிரதிநிதி (கள்) பெயர்கள்	ஈடு பெற்ற சொத்திருப்பு விவரம் (அசையாச் சொத்து) (1 ச.மீ என்பது 10.76 ச.அடிக்கு சமமானது)
1.	**திரு. K. முரளி வேலு (கடனாளர்),** நெ.1/8D, பெரும்பாடி கிராமம், அஹ்ரஹாரம், குடியாத்தம், வேலூர் - 632601.	வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கொண்டசமுத்திரம் கிராம எல்லைக்குட்பட்ட ச.எண். 131/2-ல் மொத்தமாக உள்ள 5 ஏக்கர் 31 சென்ட்டில் 0 ஏக்கர் 31 சென்ட் அளவுள்ள நிலம், ச.எண். 131/2C -ல் 4 ஏக்கர் 45 சென்ட் அளவுள்ள நிலம், ச.எண். 131/2B-ல் 0 ஏக்கர் 05 சென்ட் அளவுள்ள நிலம், புதிய ச.எண். 131/2C-, அங்கீகரிக்கப்பட்ட படி எண் 127/2007-ல் உள்ள Sivamathi New Park Town Phase-2 எனும் லே-அவுட்டில் 4.81 சென்ட் (அ) 1500 ச.அடி (அ) 139.35 ச.மீ அளவுள்ள மனை எண். 45 மற்றும் அதன் மீது கட்டப்பட்டுள்ள கட்டிடம் உட்பட உள்ள சொத்தின் முகவரி : கொண்டசமுத்திரம் கிராமம், குடியாத்தம் - 632601. எல்லைகள் : வடக்கு : மனை எண். 49, தெற்கு : கிழக்கு மேற்காக 23 அடி தெரு, கிழக்கு : மனை எண். 46, 47, மேற்கு : ராஜேந்திரனுடைய மனைஎண். 44. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கில் 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 30 அடி, வடக்குத் தெற்காக கிழக்கில் 50 அடி, வடக்குத் தெற்காக மேற்கில் 50 அடி அளவுள்ள இந்த சொத்தானது வேலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி : 30 - நவம்பர் - 2023 & மொத்த கடன் நிலுவைத் தொகை :** 30 - செப்டம்பர் - 2023* வரை **ரூ. 14,49,087/-**
2.	**திரு. வாசுதேவன் சைலேஷ் (கடனாளர்),** நெ.19/84, பாரி நகர், ராணிப்பேட்டை, வேலூர் - 632401.	வேலூர் மாவட்டம் - 632513, வாலாஜா தாலுகா, வன்னிவேடு கிராம எல்லைக்குட்பட்ட ச.எண். 771/1, பட்டா எண். 1214, பட்டாப்படி புதிய ச.எண். 771/1A1A1A-ல் 1040 ச.அடி (அ) 96.65 ச.மீ அளவுள்ள மனைஎண். 55-ன் கிழக்குப் பகுதி மற்றும் அதன் மீது கட்டப்பட்டுள்ள கட்டிடம் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். வடக்கு : ச.எண். 771/2, தெற்கு : 20 அடி பொது நடைபாதை, கிழக்கு : மனை எண். 55-ன் பகுதி, மேற்கு : ச.எண். 771/3. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கில் 21 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 20 அடி, வடக்குத் தெற்காக கிழக்கில் 50 அடி, வடக்குத் தெற்காக மேற்கில் 51½ அடி அளவுள்ள இந்த சொத்தானது வேலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் வாலாஜா சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி : 25 - நவம்பர் - 2023 & மொத்த கடன் நிலுவைத் தொகை :** 31 - அக்டோபர் - 2022* வரை **ரூ. 12,99,669/-**
3.	**திரு. E. கவியரசன் (கடனாளர்),** ச.எண்.771/2, வீட்டு எண். 66, வன்னிவேடு கிராமம், வாலாஜா தாலுகா, ராணிப்பேட்டை - 632513.	ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுகா, வன்னிவேடு கிராம எல்லைக்குட்பட்ட ச.எண். 771/2 (2.38 ஏக்கர்) -ல் உள்ள நிலங்கள் பொருத்தமான ஆணையத்தால்அங்கீகரிக்கப்பட்டு வீட்டு மனைகளாகப் பிரிக்கபட்டுள்ளது. இதற்கான D.T.C.P எண்.1091(R)/2018, தேதி : 03.08.2018 மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரால் 30.08.2018 தேதியிட்டு வழங்கப்பட்ட நா.கா. எண். A2/1580/2018, ரபி நகரில் உள்ள இந்த லே-அவுட்டில் 960 ச.அடி (அ) 89.22 ச.மீ அளவுள்ள மனை எண். 66-ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் உட்பட உள்ள சொத்திற்கான எல்லைகள். வடக்கு : ச.எண். 771/1-ல் உள்ள நிலம், தெற்கு : 20 அடி ரோடு, கிழக்கு : மனை எண். 65, மேற்கு : மனை எண். 67. அளவுகள் : கிழக்கு மேற்காக இரண்டு பக்கத்திலும் 30 அடி, வடக்குத் தெற்காக இரண்டு பக்கத்திலும் 32 அடி அளவுள்ள இந்த சொத்தானது அரக்கோணம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் வாலாஜா நகர் சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டது. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி : 06 - நவம்பர் - 2023 & மொத்த கடன் நிலுவைத் தொகை :** 30 - செப்டம்பர் - 2023* வரை **ரூ. 31,89,628/-**

*** திரும்ப செலுத்தும் நாள் / சொத்தினை பணமாக்கும் வரையில் ஆண்டுக்கு 18% மேற்கால வட்டி மற்றும் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.**

மேற்கூறியபடி ஹெச் டி எஃப் சி க்கு திருப்பிச் செலுத்த தவறும் பட்சத்தில் அந்த கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) ன் மீது இச்சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் மற்றும் அதற்குப் பொருத்தமான ஏனைய விதிகளின் அடிப்படையில் ஹெச் டி எஃப் சி மூலம் நடவடிக்கை தொடரப்படுவதோடு அதற்குண்டான செலவுகளுக்கும் விளைவுகளுக்கும் கடனாளர்கள் / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) களே பொறுப்பு.

மேற்படி கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை ஹெச் டி எஃப் சி யின் எழுத்து மூல முன்னிசைவு இல்லாமல் கிரயமோ, குத்தகையோ அல்லது வேறு எந்த வகையிலோ உரிமை மாற்றம் செய்ய மேற்படி சட்டம் தடை செய்கிறது. இதை யாதொருவர் மீறினாலோ அல்லது மீறத் தூண்டினாலோ மேற்படி சட்டத்தின்/விதியில் குறிப்பிட்டுள்ளபடி அன்னாருக்கு சிறைத்தண்டனை மற்றும் / அல்லது அபராதம் விதிக்கப்படும்.

தேதி : 26 – டிசம்பர் – 2023
இடம் : சென்னை

பதிவு அலுவலகம் : HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை – 400013

HDFC பேங்க் லிமிடெட்டிற்காக
ஒப்பம் அதிகாரம் பெற்ற அதிகாரி